https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

08th OCTOBER 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 48



ஏன் இந்த நிலை? 05




# போதையால் ஐ.நாவில் பேசும் வாய்ப்பை இழந்த எம்பிக்கள்



ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் பேசுவதற்கு ஜெனீவா சென்ற எதிர்க்கட்சி எம்பிக்கள் இருவர் காலையில் எழும்புவதற்குத் தாமதாமாகியதால் பேசும் வாய்ப்பை இழந்தனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர்கள் இருவரும் முதல் நாள் இரவு மது அருந்திவிட்டு கடும் போதையில் தூங்கியதாலேயே அவர்களால் காலையில் நேரத்தோடு எழும்ப முடியாமல் போனது என்று அந்தத் தகவல்கள் மேலும் கூறுகின்றன. 02



## தமிக்க பெரேரா ஜனாதிபதி வேட்பாளராக...

மொட்டு கட்சி எம்பியும் தொழிலதிபருமான தம்மிக்க பெரேரா அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார். 02



## மொட்டின் தலைமைத்துவம் நாமலிடம்?

மொட்டு கட்சியின் தலைமைத்துவத்தை இளம் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றொரு யோசனையை அக்கட்சி எம்பிக்கள் கட்சியின் தற்போதைய தலைவர் மஹிந்த ராஜபக்சவிடம் முன்வைத்துள்ளனர்.

அந்த யோசனையை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார் 02

## எம்பி பதவிகளை இழக்கும் ஆபத்தில் மேலும் பலர்

சுற்றாடல் துறை அமைச்சர் நஸீர் அஹமட்டுக்கு வழங்கிய நீதிமன்ற தீர்ப்பைத் தொடர்ந்து மேலும் 02

ஹரே கிருஷ்ணா

ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்

புது ஆலயத்திற்கான வர்ணபூச்சு வேலைகளும் மற்றும் முடிவு வேலைகளும் நடைபெற்று கொண்டிருக்கின்றன




ராதா கிருஷ்ணா


சீதா ராம்


ஸ்ரீ பாலாஜி


நரசிம்மர்

உயரமான கோபுரம் தசவதார மூர்த்திகள், பளிங்கு தரைகள் மற்றும் கண்கவர் வேலைபாடுகள்.



வர்ணபூச்சுக்கான மதிப்பீடு
ரூபா.5,000,000/= (5 மில்லியன்)
அன்பான பக்தர்களே நீங்களும்
இச்சேவையில் பங்கு பற்றி
விரைவில் கும்பாபிஷேகம் செய்து
பகவானின் அருளை பெறுவோமாக.

Bank Detials

Commercial Bank
Bank Branch - Kotahena Branch
Account Name - ISKCON -TEMPLE FUND
Account No. - 1120017042
Swift Code - CCEYLKLX

Hatton National Bank
Bank Branch - Jempettah Street
Account Name - ISKCON
Account No. - 207010000891
Swift Code - HBLILKLX

சர்வதேச கிருஷ்ண பக்தி கழகம்
ஸ்தாபக ஆச்சாரியார்: அருட்திரு அ. ச. பக்தி வேதாந்த சுவாமி ஸ்ரீல பிரபுபாதா
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
+94 772288166 +94 112433325
188, புதுச்செட்டித் தெரு, கொழும்பு- 13
E-Mail: info@iskconsrilanka.org Web: www.iskcon.lk
ISKCON SRI LANKA

புது சுடர்
www.puthusudar.lk
2023 OCTOBER 08 - SUNDAY

# எதற்காக வந்தாரோ அதைச் செய்கிறார்

எமது நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக்கப்பட்டதே நாட்டைப் பாதுகாப்பதற்காக அல்ல–பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்காக அல்ல ராஜபக்ஸ குடும்பத்தைப் பாதுகாப்பதற்காக–மொட்டு கட்சியை பாதுகாப்பதற்காக என்பதை அவரது செயற்பாடு அடிக்கடி நினைவுபடுத்திக்கொண்டு இருக்கிறது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் அவர் தெரிவித்த அவரது நிலைப்பாடு இதை மேலும் உறுதிப்படுத்துகிறது.

ஜெர்மன் ஊடகவியலாளருக்கு அவர் வழங்கிய பேட்டியில் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணைக்கு இடமே இல்லை என்று அடித்துக் கூறினார்.

அதன் அர்த்தம் இந்தச் சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் ராஜபக்ஸ குடும்பத்தை பாதுகாப்பதாகும்.அவர் எதற்காக ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டாரோ அந்த பணியை கட்சிதமாக செய்கிறார்.

ஒரு தனி மனிதனாக நாடாளுமன்றத்துக்குள் நுழைந்து ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டவர்.அப்படியான ஒருவரை மொட்டு ஜனாதிபதியாக நியமித்ததன் நோக்கமே தங்களை பாதுகாப்பதற்காகத்தானே தவிர பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்காக அல்ல.

அப்போதைய சூழ்நிலை மொட்டு கட்சிக்கு–ராஜபக்ச குடும்பத்துக்கு மிகவும் ஆபத்தானது.கோத்தாவை ஜனாதிபதி பதவியில் இருந்து மக்கள் விரட்டிவிட்டார்கள்.

அடுத்து முழு அரசையும் விரட்டுவதற்குத் தயாராகிக்கொண்டு இருக்கிறார்கள்.மொட்டு கட்சியில் எவரை ஜனாதிபதியாகப் போட்டாலும் மக்கள் ஏற்பதற்குத் தயாராக இல்லை.

இதனால் மொட்டுக்கு வெளியில் இருந்து ஒருவரைக் கொண்டுவர வேண்டும்.அதுவும் நல்ல அனுபவமுள்ள–திறமையுள்ள–மக்கள் நம்பக்கூடிய ஒருவராக இருக்க வேண்டும்.அப்போதுதான் மக்களின் போராட்டம் தணியும். அப்படி தணிந்தால் அது மொட்டுக்கு பாதுகாப்பைக் கொடுக்கும்.

அப்படிப்பட்ட ஒருவர் ரணில் விக்ரமசிங்க மட்டும்தான்.உடனே ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். வெளியே வர முடியாமல் மறைந்து வாழ்ந்த மொட்டு எம்பிக்கள் வெளியே வரத் தொடங்கினர்.ராஜபக்ச குடும்பமும்கூட.திட்டப்படியே மக்களின் கோபமும் தணிந்தது.

மொட்டு கட்சியினர் மீண்டும் மக்களிடம் சென்று வீழ்ந்த கட்சியின் செல்வாக்கைக் கட்டியெழுப்பும் வகையில்,கூட்டங்களை நடத்தும் அளவுக்கு நிலைமையை சீர்செய்து கொடுத்தார் ரணில்.

பாதுகாப்பு முழுமையாக உறுதியாகிவிட்டது.இந்த நிலையில்தான் அசாத் மௌலானாவின் வடிவில் ராஜபக்ஸ குடும்பத்துக்கு மீண்டும் ஓர் ஆபத்து வரத்தொடங்கியது.

அதுதான் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் அந்தக் குடும்பத்தின் தொடர்பு பற்றியது.இந்த விவகாரம் பூதாகரமாக வெடிக்க இது தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று நாடுபூராகவும் குரல்கள் ஒலிக்கத் தொடங்கின.

ஆனால்,சர்வதேச விசாரணையை அடியோடு நிராகரித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க. சர்வதேச

விசாரணை நடத்தப்பட்டால் குற்றவாளிகள் வெளிச்சத்துக்கு கொண்டுவரப்படுவார்கள்.

இந்தக் குற்றவாளிகள் தமக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் அவர்களை அம்பலப்படுத்த ஜனாதிபதி விரும்பவில்லை என்றுதான் அர்த்தப்படுகிறது.

உண்மையில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற எண்ணமிருந்தால் சர்வதேச விசாரணைக்கு இணங்க வேண்டும்.

சர்வதேச விசாரணையை மறுத்ததன் மூலம் இனி ஒருபோதும் குற்றவாளிகள் தண்டிக்கப்படமாட்டார்கள் என்பது உறுதியாகிவிட்டது.

---

## தம்மிக்க...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

*இருந்தும்,அந்தத் தேர்தலில் 51 வீத வாக்குகளை பெற முடியும் என்று உறுதியானால் மாத்திரமே தேர்தலில் போட்டியிடுவேன் என்றும் கூறியுள்ளார்.*

*அவர் எந்தக் கட்சியில் போட்டியிடப் போகிறார் என்று கேட்டதற்கு தான் இப்போது மொட்டு கட்சி என்று மாத்திரமே கூறினார்.*

## மொட்டின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

என்று அக்கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த இளம் தலைவர் யார்? நாமல் ராஜபக்ஸவா அல்லது வேறு யாருமா என்று வெளிப்படையக் கூறவில்லை.

இருந்தும்,நாமலை மனதில் வைத்துக்கொண்டே இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

## எம்.பி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பல எம்பிக்கள் எம்பி பதவிகளை இழக்கும் ஆபத்தில் உள்ளனர் என்று தகவல்கள் கூறுகின்றன.

மேற்படி தீர்ப்பால் உட்சாகமடைந்துள்ள சில கட்சிகள் தங்கள் கட்சிகளில் இருந்து வேறு பக்கம் தாவியவர்களை நீக்குவதற்கு முடிவெடுத்துள்ளன.

குறிப்பாக,எதிர்க்கட்சியில் இருந்து அரசுடன் இணைந்து அமைச்சு பதவிகளை பெற்றவர்களுக்கு அந்தக் கட்சிகள் ஆப்பு வைக்கத் தயாராகி வருகின்றன.

அதேபோல்,அரசில் இருந்து விலகி எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ளவர்களுக்கும் அதே நிலைதான்.

இதனால் இன்னும் சில நாட்களில் பல எம்பிக்கள் பதவிகள் இழப்பதைக் காணலாம் என்று அறிய முடிகிறது.

## போதையால்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

**அவர்கள் எழும்பி அவசர அவசரமாகக் கூட்டத்துக்குச் சென்றபோதும் கூட்டம் முடிவடைந்திருந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.**

**அவர்கள் இருவரும் குருநாகல் மற்றும் புத்தள மாவட்ட எம்பிக்கள். அவர்கள் கூட்டத்தில் உரையாற்றுவதற்கு 5ஆம் திகதி காலை 9.30 முதல் 10.10வரையான நேரம் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.**

**முதல் நாள் இரவு அவர்கள் சூரிச் நகரில் தங்கி இருந்தனர். அங்கு நண்பர்கள் நடத்திய மது விருந்தில் கலந்துகொண்டதால் காலையில் உரிய நேரத்துக்கு எழும்ப முடியாமல் போனது.**

**அவர்கள் அவசர அவசரமாக எழும்பி அங்கிருந்து கூட்டம் இடம்பெறும் மண்டபத்துக்கு வந்து சேரும்போது 11 மணியாகிவிட்டது. கூட்டமும் நிறைவடைந்து விட்டது.**

**இதனால் அவர்களால் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாமல் போனது.**

---

# மது மற்றும் போதைப்பொருள் பாவனை தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கு





(பு.கஜிந்தன்)

வடமாகாண மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையத்தின் எற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்ட ஊடகவியாளர்கள் மற்றும் பல்கலைக்கழக ஊடக கற்கைநெறி மாணவர்களுக்கான மதுசாரம் மற்றும் போதைப் பொருள் பாவனைகள் தொடர் பாக விழிப்புணர்வூட்டும் செயலமர்வு நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது. இந்த நிகழ்வானது மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலைய சிரேஷ்ட அதிகாரி ஏ.சி.ரஹீம் தலைமையில் நடைபெற்றது.

இதில் போதைப்பொருளை தூண்டும் விளம்பரங்கள், மதுசாரம், புகைத்தலி னால் அரசாங்கத்திற்கு வரும் வருமானம் அரசாங்கத்தினால் வெளிநாடுகள் கிடைக்கும் சலுகைகள், உள்ளூரில் விற்பனையாகும் கஞ்சா, ஐஸ் போதைப் பொருள், சிகரெட் பாவனை ஆகியவற்றின் பாவனை தொடர்பாவும், இதனால் குடும்பங்களில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களினால் மாணவர்களின் கல்வி நிலை பாதிப்பு பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

இதில் வடமாகாண மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையத்தின் உத்தியோகத்தர் இ.நிதர்சனா, யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி ம.ரகுராம் ஊடகவியாளர்கள் பங்கு பற்றினர்.



# தலைமன்னார், ராமேஸ்வரம் கப்பல் சேவை விரைவில்

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட்டின் கேள்விக்கு அமைச்சர் நிமல் பதில்!



தலைமன்னார், ராமேஸ்வரத்துக்கிடையிலான கப்பல் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படுமென துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இச்சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் நேற்று (05) எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்ததாவது,

"தலைமன்னார், ராமேஸ்வரம் கப்பல் சேவைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும். இதற்கான ஏற்பாடுகள் நடந்தவண்ணமுள்ளன. தலைமன்னாரிலிருந்த உபகரணங்கள் பழுதடைந்துள்ளன. இவற்றுக்குப் பதிலாக புதிய உபகரணங்கள் கொண்டு செல்லப்படுகின்றன.

பட்ஜெட்டில் 600 மில்லியன் ரூபா இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதியை பாராளுமன்றம் விடுவித்ததும் விரைவில் சேவைகள் ஆரம்பிக்கப்படும். இது தொடர்பில் பேச்சு நடத்த எதிர்வரும் 16இல், இந்தியா செல்லவுள்ளேன்" என்றார்.

இவ்விடயங்களை ஆராயும் பொருட்டு அமைச்சர் ஏற்கனவே தலைமன்னார் பகுதிக்கு விஜயம் செய்திருந்த வேளையில், மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் அமைச்சரை சந்தித்து பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும், பாராளுமன்றத்திலும் அமைச்சரை அடிக்கடி சந்தித்து, இக்கப்பல் சேவையை ஆரம்பிப்பது பற்றிய பல கலந்துரையாடல்களில் அவர் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மார்பகப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் முற்றாக சுகப்படுத்தலாம்

## தேசிய புற்றுநோய் தடுப்பு வேலைத்திட்டத்தின் வைத்திய நிபுணர் ஹசரலி பெர்னாண்டோ



- சுக வனிதையர் மற்றும் புற்றுநோயினை ஆரம்பத்திலேயே அறிந்துகொள்வதற்கான மத்தியஸ்தானங்களுக்கு மேலதிகமாக நாடாளாவிய ரீதியில் சத்திரசிகிச்சை நிபுணர்களின் கீழ் 30 புற்றுநோய் சிகிச்சை நிலையங்கள்

மார்பகப் புற்றுநோய் வருவதை தடுக்க முடியாவிட்டாலும் அதனை ஆரம்பத்திலேயே கண்டறிவதால் முழுமையாக சுகப்படுத்த முடியுமென தேசிய புற்றுநோய் தடுப்பு வேலைத்திட்டத்தின் வைத்திய நிபுணர் ஹசரலி பெர்னாண்டோ தெரிவித்தார்.

மார்பகப் புற்றுநோயாளர்களை கண்டறிவதற்காக சந்தர்ப்பங்களை அதிகரிக்கும் வகையில் சுக வனிதையர் மற்றும் புற்றுநோயினை ஆரம்பத்திலேயே அறிந்துகொள்வதற்காக நிறுவப்பட்டிருக்கும் நிலையகளுக்கு மேலதிகமாக நாடாளாவிய ரீதியிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் உள்ள சத்திரசிகிச்சை நிபுணர்களின் கீழ் 30 புற்றுநோய் சிகிச்சை நிலையங்களை புதிதாக ஆரம்பிக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்படும் "101 கலந்துரையாடல்" நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மேலும் கருத்து தெரிவித்த வைத்திய நிபுணர் ஹசரலி பெர்னாண்டோ,

"உலகிலும் இலங்கையிலும் பெண்களுக்கே அதிகளவில் மார்பகப் புற்றுநோய் ஏற்படுகிறது. அதனால் ஆண்களுக்கு அந்த நோய் தொற்றாது என்று கருதக்கூடாதெனவும், இருப்பினும் ஒப்பீட்டளவில் பெண்களுக்கே நோய் ஏற்படுவதற்கான அதிக சாத்தியங்கள் உள்ளன.

ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களே 80 சதவீதம் மார்பகப் புற்றுநோயினால் பாதிக்கப்படுகின்றனர் என்பதோடு, குடும்ப வழியில் எவருக்கேனும் புற்றுநோய் இருத்தலும் இதற்கான ஒரு சாதகமாக காணப்படுவதோடு, மரபணு திரிபுகளும் 15 சதவீத சாதகம் என்று குறிப்பிடலாம்.

முன்பு நோய்த் தொற்றுக்கு இலக்கானவர்களுக்கும், 30 வயதுக்கு முன்னதாக முதல் குழந்தை பெற்றிருக்காதவர்களுக்கும் மார்பகப் புற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகமுள்ளன. 11 வயதுக்கு முன்னதாக பூப்படைதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய மாற்றங்கள் 55 வயதுக்கு பின்னரும் காணப்படுதல் என்பனவும் புற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியங்களாக காணப்படுகின்றன. இவற்றை எம்மால் மாற்றியமைக்க முடியாது.

உடலில் ஏற்படும் ஹார்மோன் மாற்றங்களே அதற்கான காரணமாக அமைந்துள்ள அதேநேரம், ஹார்மோன்கள் அடங்கிய கருத்தடை மாத்திரைகளை நீண்ட நாட்களாக பாவனை செய்வோருக்கும் மார்பகப் புற்று ஏற்படக்கூடிய சாத்தியம் அதிகமாகும். இருப்பினும் தற்போது ஹார்மோன்களை கலப்புச் செய்து கருத்தடை மாத்திரைகள் உற்பத்திச் செய்யப்படுவதால் அந்த பாதிப்புக்கள் ஓரளவிட்டு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்படி விடயங்களில் மாற்றங்களை செய்ய முடியாவிட்டாலும், பூப்படைதலின் பின்னர் ஏற்படும் அதிக உடல் எடை, உணவு முறைமை, உடற்பயிற்சி, மதுபானங்கள் மற்றும் சிகரெட் பாவனை உள்ளிட்ட மாற்றம் செய்யக்கூடிய விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தலாம்.

ஒவ்வொரு மாதத்திலும் உரிய தினத்தில் 20 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் சுயமாக புற்றுநோய் பரிசோதனையை செய்துகொள்வது சிறந்தாகும். அது தொடர்பில் சுகாதார துறையினரால் தொடர்ச்சியாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

மார்பக புற்றுநோய் தொடர்பிலான சுய பரிசோதனைகளை செய்துகொள்ளும் போது, வலியுடன் கட்டிகள், தோல் தடிப்பு, நிறம் மாறல், தோற்றத்தில் மாற்றம், மார்பகங்களில் ஏற்படும் அசாதாரண மாற்றங்கள் உள்ளிட்ட மாற்றங்களை விரைவில் அறிந்துகொள்ள முடியும். அதேபோல் கமக்கட்டுக்களில் ஏற்படும் கட்டிகள் தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

அறிகுறிகள் தெரியவரும் பட்சத்தில் வைத்தியரை நாடும் அதேநேரம் சுகவனிதையர் சிகிச்சைக்கும் செல்ல முடியும். அதற்கு மேலதிகமாக, நாராஹேன்பிட்டி, இரத்தினபுரி,மாத்தறை, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் 05 புற்றுநோய சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதேபோல், நாடாளாவிய ரீதியிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் சத்திரசிகிச்சை நிபுணர்களின் கீழ் 30 புற்றுநோய் சிகிச்சை நிலையங்களை புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளது. அவ்வறான இடங்களில் பரிசோதனைகளை செய்துகொள்ள முடியும்.

இலங்கையிலும் உலகத்திலும் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில், உள்நாட்டில் அறியப்பட்டிருக்கும் 37,000 புற்றுநோயாளர்களில் 20,000 பெண்கள் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. அவர்கள் மத்தியில் மார்பக் புற்றுநோயாளர்களே அதிகம் உள்ளனர். 2020 அந்த நோயளர்களின் எண்ணிக்கை 50 ஆயிரமாக அதிகரித்திருப்பதோடு பெண்களில் 26 சதவீதமானவர்கள் மார்பக புற்றுநோய் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர்.

இலங்கையில் மாத்திரமின்றி முழு உலகிலும் இதேநிலைதான் காணப்படுகின்றது. 2020 இல் உலகில் 2.2 மில்லியன் மார்கப் புற்றுநோயாளர்கள் கண்டறியப்பட்டிருந்தனர். அதன் பாதிப்பு காரமாண உலக அளவில் 6,85,000 பேர் உயிரிழந்துள்ளனர். இலங்கையிலும் 2019 ஆம் ஆண்டு மார்பகப் புற்றுநோயினால் 784 பேர் உயிரிழந்துள்ளமையும் அவர்களில் 18 ஆண்களும் அடங்குவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தவிர்த்துக்கொள்ளக்கூடிய ஏனைய பல புற்றுநோய்கள் முறையற்ற உணவுப் பழக்கங்களின் விளைவாகவே ஏற்படுகின்றன. அதனால் முடிந்த வரையில் துரித உணவுகளிலிருந்து விடுபடுவதே அதற்குரிய சிறந்த தீர்வாகும். கோதுமை மா புற்றுநோய்க்கான சாதக காரணியாக அமையாவிட்டாலும் அதனால் ஏற்படுத்தப்படும் அதிக எடை புற்றுநோய்க் காரணிகளை தோற்றுவிக்கும்.

அதனால் பெரியவர்கள் நாளாந்தம் அரை மணித்தியாலம் என்ற அடிப்படையில் வாரத்தின் ஐந்து நாட்களில் உடற்பயிற்சியில் ஈடுபடுவதோடு, வெற்றிலை, பாக்கு ஆகிய இரு பொருட்களும் புற்றுநோய்க் காரணிகள் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டியது அவசியம். அவற்றின் பாவனையை தவிர்ப்பதன் மூலம் வாய் மற்றும் நுரையீரலை அண்டியதாக ஏற்படும் புற்றுநோயை ஆண்கள் தவிர்த்துகொள்ள முடியும்.

# நள்ளிரவில் தொலைபேசி அழைப்பு எடுத்த ஜனாதிபதி



சில நாட்களுக்கு முன் அனுராதபுர மாவட்ட எம்பி உத்திக பிரமரத்னமீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது அல்லவா.

பலர் நேரிலும் தொலைபேசியிலும் அவரிடம் நலம் விசாரித்தனர்.

அதில் ஒரு முக்கியமான அழைப்பு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் இருந்து.அதுவும் நாட்டில் இருந்து அல்ல அமெரிக்காவில் இருந்து.

அதில் பூரிக்கத்தக்க விஷயம் என்னவென்றால் ரணில் கோல் எடுத்தது. அமெரிக்காவின் நேரப்படி இரவு 1.30 மணிக்கு.

மனிசன் தூங்காம இப்படி கோல் எடுக்குறாரே என்று  நினைத்து பூரித்துப் போனாராம் உத்திக.

# ஆறு அமைச்சர்களுக்கு ஆப்பு

சில அமைச்சர்கள் தங்களின் கோரிக்கைக்கு செவி சாய்ப்பதில்லை என்ற மனக்கசப்பு மொட்டு கட்சியின் பின்வரிசை எம்பிக்களிடம் நீண்ட காலமாக இருந்து வருகிறது.

இதனால் இந்த அமைச்சர்களுக்கு என்றோ ஒரு நாள் பாடம் கற்பிக்க வேண்டும் என்று சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து நிற்கிறார்களாம் இந்த எம்பிக்கள்.

அந்த வகையில் அடுத்த மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக அந்த அமைச்சர்களை பழிவாங்கப் போகிறார்களாம்.

அவ்வாறு ஆறு அமைச்சர்களுக்கு ஆப்பு வைக்கப் போகிறார்களாம்.

பட்ஜட் வரட்டும்.அவக யாரென்று பாப்போம்.

துப்பறிவாளன்



# பஸிலின் கேம்



என்னதான் மொட்டு கட்சி ரணிலை ஜனாதிபதியாக்கினாலும் அவர் அந்தக் கட்சியை உடைத்து அதில் இருந்து தனக்கான ஆதரவுத் தளம் ஒன்றை உருவாக்கும் விடயத்தைக் கைவிடவில்லை.

நிமால் லான்சா தலைமையில் அரசியல் கூட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படுவது அதற்குத்தான்.

இந்தக் கூட்டமைப்பால் கடும் கோபமடைந்திருப்பது பசில் ராஜபக்சதான். ஒரு தடவை ரணிலை சந்தித்து கூட்டமைப்பைக் கலைத்துவிடுமாறும் கூறிவிட்டார்.

அது நடக்குற கதையா...


இந்தக் கூட்டமைப்பை எப்படியாவது குழப்ப வேண்டும் என்று முடிவெடுத்த பசில் அதற்கு ஏற்ப,இப்போது கதை ஒன்றைப் பரப்பியுள்ளார்.

இந்தக் கூட்டைமைப்பு பசிலுடையது.அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக உருவாக்குவது என்பதுதான் அந்தக் கதை.

இதனால் அதில் பலர் இணையமாட்டார்கள் என்பதுதான் அவரது ஊகம்.

அந்த ஊகத்தை மெய்ப்பிக்கும் வகையில்,குழம்பிப் போய் நிற்கிறார்களாம் அந்தக் கூட்டமைப்பில் இணையச் செல்பவர்கள்.

ரணில் மட்டும்தான் நரியா என்ன...நாங்களும் செய்வோமுள்ள...!!!




# மைத்திரியின் முட்டாள்தனமான வேலை

எதிர்கால அரசியல் தொடர்பில் பேசுவதற்காக சிறிலங்கா சுதந்திர கட்சி அக்கட்சியின் மாவட்ட அமைப்பாளர்கள், தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் மாவட்டத் தலைவர்களுடன் சில நாட்களுக்கு முன் கொழும்பில் சந்திப்பொன்றை நடத்தியது.

கூட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது அரசியல் வரலாற்றில் நல்லதையும் செய்துள்ளேன் முட்டாள்தனமான வேலைகளையும் செய்துள்ளேன் என்று கூறினார்.

அதில் முக்கியமான முட்டாள்தனமான வேலை டிலான் பெரேராவை தேசிய பட்டியல் எம்பியாக்கி அவரது தந்தையை ஊவா மாகாண ஆளுநராக நியமித்தமைதான் என்றார்.

"""இவரு செய்தது எல்லாமே கிறுக்குத்தனமான வேலதான் ..""" என்று கிசிகிசித்தார்கள் அங்கிருந்த சிலர்.



# நாமலின் போனை நீருக்குள் போட்ட மகன்

நாமல் ராஜபக்ஸ சில நாட்களுக்கு முன் ஊடகவியலாளர்களை சந்திப்பதற்கு முடிவெடுத்தார்.அதற்கான அழைப்பையும் அவர்களுக்கு விடுத்தார்.

ஊடகவியலாளர்கள் வந்துவிட்டார்கள்.நாமலும் உரிய நேரத்தில் வைத்துவிட்டார்.

இருந்தாலும்,அதற்கு முன் அதாவது,நாமல் வருவதற்கு சில நிமிடங்களுக்கு முன் ஊடகவியலாளர்கள் அவருக்கு  கோல் எடுத்தார்கள்.

அவர் பதிலளிக்கவில்லை.நாமல் வந்ததும் அவர்கள் நாமலிடம் கூறினார்கள்.

""" உங்க அப்பா நாங்க கோல் எடுத்த உடனே பதிலளிப்பார்.நீங்க அப்படி இல்லையே """ என்று சொன்னார்கள்.

அதற்கு நாமல் இவ்வாறு காரணம் ஒன்றைக் கூறினார்.

"""நான் எண்ட மகன குளிப்பாட்டிக்கிட்டு இருந்த. அப்ப.கோல் ஒண்டு வந்திச்சு.அத பேசிக்கிட்டே மகன குளிப்பாட்டிக்கிட்டு இருந்தேன்.அவன் திடீர்ண்டு போன பறிச்சு தண்ணி பேசினுக்குள்ள போட்டுட்டானே.இப்பதான் போன ரிபயர் பண்ணி எடுத்த...""" என்றார்.

இதற்கு மேல என்ன சொல்றது.புள்ள பார்த்த வேலைக்கு அப்பாவ ஏசலாமா என்றார்கள் ஊடகவியலாளர்கள்.



# அமெரிக்கா சென்ற எம்பிக்களின் கவலை

ஐ.நா மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அமெரிக்கா சென்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தேவையே இல்லாமல் மொட்டு கட்சி எம்பிக்கள் சிலரையும் அழைத்துச் சென்றார் அல்லவா.

கூட்டம் இடம்பெறும் இடத்தில் ஜனாதிபதியுடன் இருந்தது வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் சில அதிகாரிகளும்தான்.

உடன் சென்ற அந்த எம்பிக்கள் இருந்தது வேறு ஓர் அறையில்.

தங்களை இவ்வாறு தள்ளி வைத்தமையால் சரியான கவலையாம் அவர்களுக்கு.

ஐ.நாவின் நிரந்தர வதிவிட பிரதிநிதி மொஹான் பீரிஸிடன் தங்களது அதிருப்தியை வெளியிட்டார்களாம்.

"இவங்கள எதுக்காக ஜனாதிபதி கூட்டிப் போனார் என்பதையே மறந்துட்டாங்க..."



ஒட்டுமொத்த மக்களின் எதிர்ப்பும் இந்த அரசுக்கு இருந்த நிலையில் அவர் அரசுடன் இணையும் முடிவை இடைநிறுத்தி கட்சியின் முடிவின் பின்னால் சென்றிருக்க வேண்டும் என்பதே எல்லோரதும் கருத்தாகும்.



# ஏன் இந்த நிலை?

இந்த வாரம் இலங்கையின் அரசியல் தளத்தில் நிகழ்ந்த பல விடயங்களுல் முக்கியமானதும் பரபரப்பானதும் என்னவென்றால் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட எம்பியும் சுற்றாடல் அமைச்சருமான ஹாபீஸ் நசீர் அஹமட் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கட்சி உறுப்புரிமையில் இருந்து நீக்கப்பட்டமை சரி என்ற உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புதான்.

எதிர்காலத்தில் கட்சி தாவுபவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் ஒரு செய்தியாக இந்தத் தீர்ப்பை எல்லோரும் பார்க்கிறார்கள்.

நாட்டை பொருளாதார ரீதியில் வீழ்த்திக்கொண்டிருந்த கோத்தாவின் அரசை எப்படியாவது வீழ்த்த வேண்டும் கோத்தாவை ஜனாதிபதி பதவியில் இருந்து விரட்ட வேண்டும் என்று ஒட்டுமொத்த நாட்டு மக்களும் முடிவெடுத்திருந்த நிலையில்தான் ஹாபீஸ் அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவியை ஏற்றுக்கொண்டார்.

இது அவரது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாட்டுக்கு எதிரானது.

2020 நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து அதில் அவர் வெற்றி பெற்றது முதல் கோத்தாவின் அரசுடன் முஸ்லிம் காங்கிரஸ் இணைய வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு வந்தார்.

கோத்தாவின் அரசு நிலையான அரசு.பலமான அரசு.அந்த அரசை எதிர்த்து எதையும் செய்ய முடியாது. அந்த அரசுடன் இணைவதுதான் புத்திசாலித்தனம் என்ற முடிவுக்கு வந்தார் ஹாபீஸ்.

ஆனால்,முஸ்லிம் காங்கிரஸ் அதை ஏற்கவில்லை.

இந்த நிலையில்,அவர் கோத்தா அரசால் கொண்டுவந்த 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவு வழங்கினார்.

அதனூடாக கோத்தா அரசுடன் ஒரு நெருக்கத்தை ஏற்படுத்தினார். கட்சி வராவிட்டாலும் பரவாயில்லை.தான் மட்டுமாவது அரசுடன் இணைவது என்ற முடிவை எடுத்தார்.

அவருக்குத் தேவையாக இருந்தது ஓர் அமைச்சுப் பதவி மட்டுமே. எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு எதையும் செய்ய முடியாது. அமைச்சுப் பதவி இருந்தால் மாத்திரமே மக்களுக்கு சேவை செய்ய முடியும் என்ற நம்பிக்கை உடையவர்.

அதற்கு காரணமும் உண்டு. கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்தபோது அவருக்குக் கிடைத்த அனுபவம்தான் அது.

உயர் பதவி ஒன்று கையில் இருந்தால் எப்படியெல்லாம் சேவை செய்யலாம் என்பதை அனுபவரீதியாகக் கண்டார்.

அரசுடன் இணைவதை அவருக்கு வாக்களித்த மக்கள் முதலில் எதிர்த்தாலும் அந்த அமைச்சைக் கொண்டு சேவை செய்து அந்த எதிர்ப்பை சமாளித்துவிடலாம்எதிர்க்கட்சி அரசியலால் சமூகத்துக்கு எதுவும் செய்ய முடியாது என்பதை உணர்த்திவிடலாம் என்று முடிவெடுத்தார்.

அதன்படியே அவருக்கு எதிர்ப்பும் வந்தது.எம்பிக்களின் வீடுகள் எரிக்கப்பட்டபோது ஏறாவூரில் இருந்த ஹாபியின் அலுவலகமும் எரிக்கப்பட்டது.

அதன்பின் எதிர்ப்பு சிறிது சிறிதாக குறையத் தொடங்கியது. அவர் அடிக்கடி ஏறாவூருக்குச் சென்று மக்களை சந்தித்து அவரது அரசியல் வேலைகளை செய்யத் தொடங்கினார்.

இருந்தும்,கட்சியின் நிலைப்பாட்டுக்கு எதிராக அரசுடன் இணைந்தமைக்காக அவரது கட்சி அவரை கட்சியின் உறுப்புரிமையில் இருந்து நீக்கியது. அதற்கு எதிராக அவர் நீதிமன்றம் சென்றபோதே மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது.

நஸீர் அஹமட் துடிப்பான அரசியல்வாதி.கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்தபோது பெறுமதிமிக்க பல சேவைகளை செய்தவர்.

தனக்கு ஏதாவது அமைச்சுக் கிடைத்தால் போதும் அதை வைத்து நினைத்த சேவையை தன் மக்களுக்கு செய்ய முடியும் என்ற நம்பிக்கையுடையவர்.

அரசில் இணைந்தால் அடுத்த தேர்தலில் கட்சியில் தனக்கு இடம் கிடைக்காது என்பது அவருக்குத் தெரியும்.

அப்படி தெரிந்துகூட சவால்மிக்க முடிவை எடுத்தார். இப்போது இவ்வாறான தீர்ப்பை எதிர்கொண்டுள்ளார்.

ஒட்டுமொத்த மக்களின் எதிர்ப்பும் இந்த அரசுக்கு இருந்த நிலையில் அவர் அரசுடன் இணையும் முடிவை இடைநிறுத்தி கட்சியின் முடிவின் பின்னால் சென்றிருக்க வேண்டும் என்பதே எல்லோரதும் கருத்தாகும்.

இல்லை. அமைச்சுப் பதவியை எடுத்ததுதான் சரியான முடிவு என்பதுதான் அவரின் நிலைப்பாடு.அந்த அமைச்சு பதவியின் ஊடாக மக்களுக்கு சேவை செய்யும்போது தான் எடுத்த தீர்மானம் சரி என்பதை மக்கள் உணர்வார்கள் என்பது அவரது முடிவு.



ஜனாதிபதியின் பொருளாதார அபிவிருத்தி முயற்சிக்கு ஹாபீஸ் உறுதுணையாக இருப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

மத்திய கிழக்கு நாடுகளுடன் அவருக்கு தொடர்பிருப்பதால் அந்த உறவைக்கொண்டு அவர் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுவார் என்றெல்லாம் எதிர்பார்க்கப்பட்டது.

உண்மையில் அவர் அரசில் இணைவதற்கு இன்னொரு காரணம் ரணிலின் திறமை-அனுபவம்மீது வைத்த நம்பிக்கைதான்.

அவர் எப்படியும் பொருளாதார நிலைமையை சீர்செய்வார். அவரோடு இணைந்து பயணிப்பது தனது அரசியலுக்கும் வெற்றியைத் தரும் என்று அவர் கருதினார்.

தனது பங்களிப்பையும் ரணிலுக்கு வழங்கினால் அடுத்த தேர்தலில் தேசிய பட்டியல் ஒன்றை ரணில் தனக்கு வழங்குவார் என்ற எதிர்பார்ப்பும் ஹாபீஸிடம் இருந்தது என்கிறது அவரது வட்டாரம்.

எது எப்படியோ நீதிமன்ற தீர்ப்பை மதித்தே ஆக வேண்டும். தனது அரசியல் எதிர்காலத்தை நோக்கி அடுத்து என்ன செய்யப்போகிறார் என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

# ரிட்ஸ்பரி கனிஷ்ட தேசிய ஸ்கொஷ் சம்பியன்ஷிப் நிறைவு



இலங்கையர்களின் அபிமானம் வென்ற சொக்லட் வர்த்தக நாமமான, சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின், ரிட்ஸ்பரி, 34ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரிட்ஸ்பரி கனிஷ்ட தேசிய ஸ்கொஷ் சம்பியன்ஷிப் 2023 போட்டிகள், 2023 செப்டெம்பர் 17ஆம் திகதி இரத்மலானை விமானப் படை ஸ்கொஷ் திடலில் வெற்றிகரமாக பூர்த்தியடைந்ததாக அறிவித்துள்ளது.

தேசிய மட்டத்தில் ஸ்கொஷ் போட்டிகளின் வளர்ச்சி மற்றும் ஊக்குவிப்புக் ஒப்பற்ற அர்ப்பணிப்பை வெளிப்படுத்தி வரும் ரிட்ஸ்பரி, தொடர்ச்சியான 15 வருடங்களாக இந்த பெருமைக்குரிய சம்பியன்ஷிப் போட்டிகளின் நம்பிக்கையை வென்ற அனுசரணையாளராகத் திகழ்கின்றது.

செப்டெம்பர் 9 ஆம் திகதி ஆரம்பமாகிய இந்த ஆண்டின் நிகழ்வின் போது, 450 தனிநபர் பங்குபற்றுநர்கள் பங்கேற்றிருந்தனர்.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பங்குபற்றுநர்களில் 40% அதிகரிப்பு பதிவாகியிருந்தது. ஆறு வயதுப் பிரிவுகளில் இளம் ஆண் மற்றும் பெண் பிள்ளைகள் இந்தப் போட்டித் தொடரில் பங்கேற்றிருந்தனர். 9, 11, 13, 15, 17 மற்றும் 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான போட்டிகள் நடைபெற்றன.

ஆண்கள் பிரிவில் கொழும்பு டி.எஸ். சேனநாயக்க கல்லூரியின் நெவிந்து லக்மன் கனிஷ்ட தேசிய சம்பியன் பட்டத்தை வென்றார். றோயல் கல்லூரியின் செஹாத் பெரேரா இரண்டாமிடத்தையும், ரோயல் கல்லூரியின் மதீஷ விஜேசேகர மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

பெண் பிரிவில், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயத்தின் சனித்மான சினாலே கனிஷ்ட தேசிய சம்பியன் பட்டத்தையும், அதே பாடசாலையின் தேமினி பள்ளியகுரு இரண்டாமிடத்தையும் பெற்றார்.

# மக்கள் வங்கிக்குத் தங்க விருது

Creating a Legacy of Caring for Generations to Come (வரவிருக்கும் தலைமுறைகள் மீதான அக்கறையின் மரபினைத் தோற்றுவித்தல்) என்ற தலைப்பில் மக்கள் வங்கியின் ஆண்டறிக்கை 2022, சமீபத்தில் நடைபெற்ற சர்வதேச ARC விருதுகள் 2023 இல் ஐந்து (5) விருதுகளை வென்றுள்ளது.

யுசுஊ விருதுகள் நிகழ்வு, 30 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்டுள்ளதுடன், மற்றும் 90 க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 1,600 க்கும் மேற்பட்ட விண்ணப்பங்களை வருடாந்தம் பெற்று வருவதுடன், இவ்விருதுகள் சர்வதேச நிதிச் சமூகத்தால் ஆண்டு அறிக்கைகளுக்கான ஒஸ்கார் என்று பரவலாக அறியப்படுகின்றன.


வங்கியினால் சம்பாதிக்கப்பட்டுள்ள இப்பாராட்டுகள் பல பிரிவுகளில் கிடைக்கப்பெற்றதுடன், மேலும் குறிப்பாக, இந்த ஆண்டு நிகழ்வில் தங்கத்தை



வென்ற இலங்கையிலிருந்து உரிமம் பெற்ற ஒரேயொரு வங்கி இதுவென்பது சிறப்பம்சமாகும்.

இவ்விருது குறித்து மக்கள் வங்கியின் தலைவர் திரு. சுஜீவ ராஜபக்ஷ அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், "இந்த விருதுகள் ஆக்கபூர்வமான படைப்புடன் நிதிசார் வெளிப்படைத்தன்மையை தங்குதடையின்றி இணைக்கும் வங்கியின் குறிப்பிடத்தக்க திறனுக்கான சான்றாகும் என்று குறிப்பிட்டார்.

வர்த்தக சுடர்




# ONE SKILL RETAKE அறிமுகம்

பிரிட்டிஷ் கவுன்சில் ஐநுடுவுளு தேர்வுக்கு தோற்றுவோர் தாம் எதிர்பார்த்த பெறுபேறுகளை எய்தாதபட்சத்தில், மீண்டும் முழுப் பரீட்சைக்கு தோற்ற வேண்டிய தேவையை இல்லாமல் செய்யும் புதிய உள்ளம்சத்தை அறிமுகம் செய்துள்ளது.

One Skill Retake என்பதனூடாக பரீட்சார்த்திக்கு, IELTS பரீட்சையில் செவிமடுத்தல், வாசித்தல், எழுதுதல் அல்லது பேசுதல் (Listening, Reading, Writing or Speaking) போன்றவற்றில் ஒரு பகுதிக்கு மாத்திரம் மீளத் தோற்றும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சாதாரண IELTS பரீட்சையின்போது தோற்றுபவரின் திறன்களை இனங்காணும் முறை மற்றும் நேரம் போன்றன மாறாமல் இருக்கும் என்பதுடன், இதர திறன்களை பூர்த்தி செய்வதில் பரீட்சார்த்திகள் செலவிடும் நேரத்தை குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

பிரிட்டிஷ் கவுன்சிலில் IELTS பணிப்பாளர் அன்ட்ரூ மெக்கென்சி கருத்துத் தெரிவிக்கையில், One Skill Retake என்பது IELTS வாடிக்கையாளர்களின் கருத்துக்களை கேட்டறிந்ததன் பின்னர் உருவாக்கப்பட்டுள்ளது.

சரியான தயார்ப்படுத்தல் மற்றும் ஆதரவுடன் எமது பரீட்சார்த்திகளுக்கு, பரீட்சை தினத்தில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதை நாம் அறிவோம்." என்றார்.

மேலதிக தகவல்களுக்கு, IELTS One Skill Retake page எனும் இணையத்தளத்தைப் பார்வையிடவும்.



# VIMAN குடியிருப்புத் திட்டம் அறிமுகம்

இலங்கையின் ரியல் எஸ்டேட் துறையில் புரட்சியை ஏற்படுத்தியுள்ள John Keells Properties ஜா-எல நகரின் மையப்பகுதியில் சமகால வாழ்க்கையை மாற்றும் வகையில் தனது புதிய குடியிருப்புத் திட்டமான 'Viman' ஐ அறிமுகப்படுத்துவதில் பெருமையடைகிறது.

புகழ்பெற்ற John Keells Holdings நிறுவனத்தின் சொத்துக்கள் தொடர்பான பிரிவாக விளங்கும் John Keells Properties நிறுவனம், கனவு வாழ்கைக்கான இடங்கள் மற்றும் விதிவிலக்கான அனுபவங்களை வழங்கப் புதுமையான அணுகுமுறையுடன் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தி ரியல்ஸ் எஸ்டேட் சந்தையில் மதிப்புமிக்க நற்பெயரை சம்பாதித்துள்ளது.

"புதிய உலகத்தை உருவாக்குதல்" என்ற நோக்கத்துக்கு இணங்கும் வகையிலும், வாழ்க்கையின் அனுபவங்களை மறுவடிமைப்பதற்கு இடமளிக்கும் வகையிலும் அமையப்பெற்றுள்ள Viman குடியிருப்புத் திட்டம் John Keells Properties நிறுவனத்தின் தனித்துவமான புதிய முயற்சியைப் பிரதிபலிக்கிறது.

6 ஏக்கர் நிலப்பரப்பு விஸ்தீரணத்தில், சௌகரியமான நவீன 418 தொடர்மாடி வீடுகளைக் கொண்டிருப்பதுடன், ஏஜைஅயெ குடியிருப்புத் திட்டத்தின் வடிவமைப்பானது சிறிய நகரின் கட்டமைப்பின் அழகைத் தக்கவைக்கும் அதேநேரம், கொழும்பு நகரை இலகுவில் அணுகக் கூடியதாகவும், பாதுகாப்பு, குடும்பங்களுக்கு நட்பான சூழலை வழங்கும் வகையிலும் அமைந்துள்ளது.

John Keells Holdings PLC நிறுவனத்தின் உடமைப் பிரிவின் தலைவர் நயன மாவில்மட குறிப்பிடுகையில், இது வெறுமனே ஒரு குடியிருப்பாக மாத்திரம் அமையாது. இது சிறிய நகரின் அரவணைப்பில் மூழ்கியிருக்கும் ஒரு வாழ்க்கை முறையாக அமையும். சமநிலை, இயற்கை மற்றும் நவீன வசதி போன்ற அடிப்படைகளால் ஈர்க்கப்பட்டு, சுற்றுச் சூழல் பற்றிய கரிசனை, பல்வேறு இடங்களுக்கான அணுகல், சமூக உணர்வை வளர்த்தல் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்ட குடியிருப்புக்களைக் கொண்ட தொகுதியாக இது காணப்படுகிறது. ஸ்மார்ட் நகரமயமாக்கலுக்கு மக்களை மையாகக் கொண்ட திட்டமாக இது அமைந்துள்ளது" என்றார்.

# FACETS SRI LANKA கண்காட்சி ஜனவரியில்...














தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை (NGJA) மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை (EDB) ஆகியவற்றுடன் இணைந்து, ஆசியாவின் முதன்மையான இரத்தினக்கல் மற்றும் ஆபரண கண்காட்சியான FACETS Sri Lanka நிகழ்வை, எதிர்வரும் 2024 ஜனவரி 06 முதல் 08 வரை சினமன் கிராண்ட் ஏட்ரியம் லொபியில் நடாத்தவுள்ளதாக, இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கம் (SLGJA) அறிவித்துள்ளது.

2002 இல் உருவாக்கப்பட்ட SLGJA, இலங்கையில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் உயர் அமைப்பாகும் என்பதோடு, இது இத்துறையில் உள்ள அனைத்து துணைத் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

பல ஆண்டுகளாக சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரணத்துறை நாட்காட்டியில், FACETS Sri Lanka கண்காட்சி ஒரு முக்கிய நிகழ்வாக இடம்பிடித்துள்ளது.

அந்த வகையில் இந்த வருடமும், உலகளாவிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் சந்திப்பு மையமாக அது அமையவுள்ளதோடு, உலகம் முழுவதிலுமிருந்து மொத்த விற்பனையாளர்கள், ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர்கள், பட்டைதீட்டுவோர், சில்லறை விற்பனையாளர்கள், சேகரிப்பாளர்கள், முக்கியமான வர்த்தகர்களுக்கு இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களை ஈர்க்கும் வகையில் செயற்படும்.

இந்த கண்காட்சி குறித்த அறிமுக ஊடக மாநாடு கடந்த திங்களன்று சினமன் கிராண்ட் ஹோட்டலில் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# SLT-MOBITEL இன் புதிய வரவு

களிப்பூட்டும் மற்றும் புத்தாக்கமான புதிய சேவை வழங்கல்களை எதிர்பார்க்கும் இளம் பாவனையாளர்கள் மற்றும் சகல குடும்ப அங்கத்தவர்களின் அர்ப்பணிப்பை கௌரவித்து, தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL, தனது ஹோம் புரோட்பான்ட் பாவனையாளர்களுக்கு நம்பமுடியாத களிப்பூட்டும் அனுபவத்தை பெற்றுக் கொடுப்பதற்காக புதிய '7xFun' Add-on data bundle ஐ அறிமுகம் செய்துள்ளது.

லுழரவுரடிந, ஏஉைநச, றூயவளயிி, குயஉநடிழழம, ஐஆழ, ஐளெவயபசயஅ மற்றும் வுமைவுழம போன்ற சமூக ஊடக கட்டமைப்புகளுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட add-on data bundle ஆக அமைந்திருப்பதுடன், இளம் வயதினர் மற்றும் குடும்பத்தாருக்கு வலுச்சேர்க்கப்படுகின்றது.

SLT-MOBITEL'இன் 7xFun add-on என்பது 20GB மீளத் தொடரும் டேட்டா பண்டலாக அமைந்திருப்பதுடன், ஏழு நாட்களுக்கு செல்லுபடியாகும். ரூ. 195




எனும் சகாய விலையில் ஏழு அப்ளிகேஷன்களை பயன்படுத்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

மேலும், SLT-MOBITEL ஹோம் புரோட்பான்ட் பாவனையாளர்கள், அடிப்படை புரோட்பான்ட் பக்கேஜ்களுக்கு பதிவு செய்து கொண்டு, data add-ons ஐ கொள்வனவு செய்யலாம். Data add-ons மீள தொடர்வதாக அமைந்திருப்பதுடன், எந்நேரத்திலும் பதிவு நீக்கம் செய்து கொள்ளலாம்.

இளம் வாடிக்கையாளர்களுக்கும் அவர்களின் குடும்பத்தாருக்கும் தற்போது தமக்கு பிடித்த சமூக ஊடக அப்ளிகேஷன்களை SLT-MOBITEL 7xFun Add-on data bundle க்கு பதிவு செய்து கொண்டு அனுபவித்து மகிழலாம். இலகுவாக செயற்படுத்திக் கொள்ள முடியும் என்பதால் சிக்கல்களற்ற SLT-MOBITEL 7xFun add-on data bundle ஊடாக, தினசரி வாழ்க்கைக்கு அவசியமான இணைய வசதி வழங்கப்படுகின்றது.

7xFun add-on data bundle ஐ செயற்படுத்திக் கொள்வதற்கு MySLT App அல்லது MySLT Portal பயன்படுத்தலாம். மேலதிக தகவல்களுக்கு, வாடிக்கையாளர்கள் 1212 உடன் அழைப்பை மேற்கொள்ளலாம் அல்லது www.sltmobitel.lk எனும் இணையத்தளத்தைப் பார்வையிடலாம்.

# கடற்கரை சிரமதான நிகழ்வு

வர்த்தக பொறுப்புணர்வு மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் மிகவும் முன்னுதாரணமான ஒரு முயற்சியாக, இலங்கையில் அனைவராலும் நேசிக்கப்படுகின்ற கடற்கரை பிரதேசங்களின் ரம்மியமான அழகினை மீட்டெடுக்கும் ஒரு சிறந்த நோக்குடன், அலியான்ஸ் லங்கா நிறுவனம் மற்றும் Pearl Protectors ஆகியன கூட்டிணைந்துள்ளன.

ஆண்டுதோறும் செப்டெம்பர் மாதத்தில் மூன்றாவது சனிக்கிழமையன்று அனுட்டிக்கப்பட்டு வருகின்ற சர்வதேச சுத்தப்படுத்தல் தினத்தில், தெகிவளை கடற்கரைப் பிரதேசத்தில், அர்ப்பணிப்புமிக்க சுமார் 100 தொண்டர்களின் துணையுடன் சுத்தப்படுத்தும் பணிகளை அலியான்ஸ் லங்கா முன்னெடுத்துள்ளது.

எமது சுற்றுச்சூழலை சிறந்ததாக மாற்றுவதில் அலியான்ஸ் லங்கா கொண்டுள்ள ஓயாத அர்ப்பணிப்பை இந்த உன்னதமான முயற்சி பிரதிபலிக்கின்றது.

அலியான்ஸ் லங்கா அணியானது Pearl Protectors இன் பேரார்வத்தின் துணையுடன், தெகிவளை கடற்கரைப் பிரதேசத்தில் காணப்பட்ட மீள்சுழற்சி செய்யப்படமுடியாத குப்பைகூளங்களை அப்புறப்படுத்தி, அப்பிரதேசத்தை சுத்தமானதாக, பாதுகாப்பானதாக மற்றும் அனைவரையும் கவரக்கூடிய இடமாக மாற்றியமைத்தது.






# COOL PLANET இல் அமானாவின் ATM

அமானா வங்கி தனது புதிய ATM இயந்திரத்தை, இல. 149, எஸ்.டி.எஸ். ஜயசிங்க மாவத்தை, நுகேகொட எனும் முகவரியில் அமைந்துள்ள Cool Planet Department Store வளாகத்தில் திறந்துள்ளது.

பல அடுக்கு Department Store இல் முன்னணி சர்வதேச வர்த்தக நாமங்கள் மற்றும் பல்அம்ச உணவு விற்பனை பகுதி போன்றன அடங்கியுள்ளன.

புதிய ATM ஐ வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால் திறந்து வைத்ததுடன், அந்நிகழ்வில், வணிக வங்கியியல் உப தலைவர் இர்ஷாத் இக்பால், கூட்டாண்மை வங்கியியல் உதவி உப தலைவர் ரஜேந்திர ஜயசிங்க, வாடிக்கையாளர் உறவு பேண் முகாமையாளர் மஞ்சுள பீரிஸ் மற்றும் Cool Planet விற்பனை பிரிவின் தலைமை அதிகாரி இம்ரான் இக்பால் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

அமானா வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால் கருத்துத் தெரிவிக்கையில், “நுகேகொட Cool Planet இல் ATM ஒன்றை நிறுவியுள்ளதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

இதனூடாக சொப்பிங் செய்யும் வாடிக்கையாளர்களுக்கு இலகுவாக பண மீளப் பெறுகைகளை மேற்கொள்வது மற்றும் கணக்கு மீதிகளை அறிந்து கொள்வது போன்றவற்றை மேற்கொள்ள முடியும். எம்மையும் இணைத்து கொண்டமைக்கு Cool Planet நிர்வாகத்துக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம்.” என்றார்.

# MAS Holdings இற்கு விருது




ஆடைகள் மற்றும் ஜவுளி உற்பத்தியில் உலகளாவிய முன்னணி நிறுவனமான MAS Holdings, தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக மதிப்புமிக்க Clarivate South Asia Innovation விருதை பெற்றுள்ளது.

புத்தாக்கங்களில் தொடர்ந்து சிறந்து விளங்கும் நிறுவனங்களை அங்கீகரிக்கும் புகழ்பெற்ற உலக அறிவாற்றல் நிறுவனமான Clarivate, இந்தியாவின் மும்பையில் நடைபெற்ற மதிப்பிற்குரிய Innovation Forumஆல் இந்த விருது வழங்கப்பட்டது.

South Asia Innovation Awardsக்கான தேர்வு செயல்முறை ஊடயசளைவநஇன் சிறந்த 100 Global Innovators™ என்ற வழிமுறையுடன் நெருக்கமாக இணைகிறது.

இது உலகளாவிய கண்டுபிடிப்புத் தலைவர்களை அடையாளம் காண்பதற்கான அளவுகோலாகும். Derwent World Patents Index™ (DWPI™) மற்றும் Derwent Patents Citation Index™ ஆகியவற்றின் தரவுகளின் அடிப்படையில், காப்புரிமை அளவு மற்றும் ஒவ்வொரு காப்புரிமை பெற்ற யோசனையின் (Ideas) புத்தாக்கத் திறனின் வலிமையையும் ஊடயசளைவந மதிப்பீடு செய்கிறது.

MAS Holdingsஇன் பிரதம கண்டுபிடிப்பு அதிகாரி ரணில் விதாரண கூறுகையில், “Clarivate நிறுவனத்திடமிருந்து தெற்காசிய கண்டுபிடிப்பு விருதை மீண்டும் பெறுவது எமக்கு மிகுந்த உற்சாகத்தை அளிக்கிறது. இந்த தொடர்ச்சியான சாதனை, புத்தாக்கமான கண்டுபிடிப்புகளை வழங்குவதற்கும் உயர்தர அறிவுசார் சொத்துக்களின் (Intellectua; Property) கோப்புறையைப் பராமரிப்பதற்கும் MAS இன் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாக நிற்கிறது – என்றார்.

# FNGHLH DC-93G நெல் அறுவடை இயந்திரம் வடக்கில் அறிமுகம்

ஹேலிஸ் அக்ரிகல்ச்சர் ஹோல்டின்ஸ் நிறுவனம், அதன் சமீபத்திய விவசாய அறுவடை தொழில்நுட்பமான குபோடா DC-93G ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரத்தை பெருமையுடன் வெளியிட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் எழுதுமட்டுவாழ் கிளாலியை சேர்ந்த தனது பெருமைமிகு வாடிக்கையாளரான மகேஸ்வரன் கபில்ராஜிடம் இயந்திரத்தை 2023 செப்டம்பர் 20 ஆம் திகதி நிறுவனம் கையளித்திருந்தது.

இதன் மூலம், உற்பத்தித்திறன் மற்றும் செயற்றிறனில் ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில், மற்றொரு மைல்கல்லை நிறுவனம் வடக்கில் பதித்துள்ளது.

தாழ் வயல்களுக்கு ஏற்ற வகையில் செயற்படும் குபோடா DC-93G இன் தன்மை, அதிக செயற்றிறனுக்கான அகலமான வெட்டை




ஏற்படுத்துவதற்கான அகலம் மற்றும் சேற்று நிலங்களில் சிறந்த செயற்திறன் ஆகியவற்றை கொண்டு இருப்பதனால், இலங்கையின் வயல்களுக்கு சிறந்த அறுவடை இயந்திரமாக அமைகிறது.

வயலின் நிலமைகளைப் பொறுத்து, இந்த அறுவடை இயந்திரம் உச்சபட்சமாக ஒரு நாளில் 15 ஏக்கருக்கு மேல் அறுவடை செய்யும் திறனை கொண்டது.

அதன் உறுதியான வடிவமைப்பானது, அசைக்க முடியாத நிலைக்கும் தன்மையை உறுதி செய்கிறது. இது கடுமையான சூழ்நிலையிலும் தடையின்றி அறுவடை செய்ய வழியேற்படுத்துகின்ற அதேவேளையில், நெல் அறுவடை செய்வதில் அதன் குறிப்பிடும்படியான திறனானது, ஏனைய எல்லா மாதிரிகளையும் மிஞ்சி நிற்கிறது.




# புதினா சுவையுடன் NATURAL SALT

இலங்கையின் தேசிய வாய்ச் சுகாதார கணக்கெடுப்பு – 2015/2016 தகவலின் படி, இலங்கையில் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 47% ஆனோர் தற்போது ஈறு பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பெரும் சவாலை எதிர்கொள்கின்றனர்

இந்த பிரச்சினைக்கான தீர்வாக க்ளோகார்ட் இயற்கை உப்பு (Clogard Natural Salt) தயாரிப்பை Clogard அறிமுகம் செய்துள்ளது.

இந்த பற்பசையானது, ஈறு பிரச்சினைகள் மற்றும் பற்குழிகளின் அடிப்படைக் காரணங்களுக்கான தனித்துவமான இரட்டைப் பாதுகாப்பு சூத்திரத்தை வழங்குகிறது.

இயற்கை உப்பானது, வலிமிகுந்த ஈறு நோய்த்தொற்றுகளுக்கு சிகிச்சையளிக்கவும், வாய்ப் புண்களைத் தடுக்கவும், பல் ஈறுகளின் ஆரோக்கியத்தை பராமரிக்கவும் உதவுகிறது.

அதே நேரத்தில் செயற்பாட்டு புளோரைட்டானது பற்குழி உருவாவதை தடுப்பதோடு மட்டுமல்லாமல் அதனை சீரமைக்கிறது. இதன் மூலம் ஈறு பிரச்சினைகள் மற்றும் பற்குழிகளிலிருந்து இரட்டை பாதுகாப்பை வழங்குகிறது.

Clogard Natural Salt ஆனது, கடந்த 2020 ஓகஸ்ட் மாதத்தில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டதோடு, பல இலங்கையர்களின் இதயங்களை வென்று மனதையும் கவர்ந்துள்ளது. இந்த பற்பசை பெருமை மிக்க SLS (இலங்கை தரநிலைகள்) அங்கீகாரத்தைப் பெற்றுள்ளமையானது, தரம் மற்றும் செயற்றிறனின் பிரகாசத்திற்கான ஒரு சான்றாகும்.

இந்த தலைசிறந்த தயாரிப்பில் காணப்படும் ஒவ்வொரு மூலப்பொருளும் மிகச் சிறந்ததை மாத்திரம் வழங்கும் வகையில், மிகக் கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தேசத்தின் வாய்ச்சுகாதார நல்வாழ்வுக்கான க்ளோகார்டின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை அது மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

# நுகர்வோர் வசதியை மேம்படுத்தும் யூனிலீவர் USTORE.LK

யூனிலீவர் ஸ்ரீ லங்காவின் (Unilever Sri Lanka) உத்தியோகபூர்வ இலத்திரனியல் வர்த்தகத் தளமான uStore.lk, தனது வாடிக்கையாளர்களுக்கு பலசரக்கு பொருட்களின் கொள்வனவை மிகவும் வசதியாகவும் நம்பகமானதாகவும் சிறப்பாகவும் மாற்றும் முயற்சியில் Uber Eats மற்றும் Celeste Daily ஆகியவற்றுடன் சமீபத்தில் ஒரு கூட்டாண்மையை ஏற்படுத்தியுள்ளது.




இந்த கூட்டாண்மையானது, தற்போது uStore.lk தளத்தை சிரமமின்றி அணுகுவதற்கு Uber Eats மூலம் வசதியை ஏற்படுத்துகிறது.

வாடிக்கையாளர்கள் Uber Eats இல் உள்ள uStore.lk விற்பனை நிலையத்தை பார்வையிட்டு, பொருட்களை கொள்வனவு செய்வதன் மூலம், uStore.lk இலுள்ள உயர்தர தயாரிப்புகளை தங்களது வீட்டுக்கே நேரடியாக வரவழைத்து பெற்றுக் கொள்ளலாம்.

நாட்டின் டிஜிட்டல் மயமாக்கல் மட்டத்தை மேம்படுத்துவதற்கான யூனிலீவர் ஸ்ரீ லங்காவின் அர்ப்பணிப்பின் ஒரு அங்கம் எனும் வகையில், uStore.lk ஆனது வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட முன்னோக்கிய சிந்தனையுடன் இலத்திரனியல் வணிகத்தில் புத்தாக்க கண்டுபிடிப்புகளை மேம்படுத்துவதற்கு உறுதி பூண்டுள்ளது.

இந்த சமீபத்திய திட்டமானது, விரைவு வர்த்தக சந்தையில் uStore.lk நுழைவதை அடையாளப்படுத்துகிறது.

இந்த அடைவானது, அதன் பயணத்தில் ஒரு குறிப்பிடும்படியான மைல்கல்லாகும்.